Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.58/2023 PW-1**

Name : பூங்காவனம்
Father / Husband name : கோதண்டம்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.11.2024

**Accused Absent. Petition u/s 317 CrPC filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காட்டுச்சிவிறியில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். சாட்சி ஏழுமலை, திருநாவுக்கரசு கொள்ளாறில் இருப்பவர்கள். சாட்சி மணிகண்டன் எனது மாமா மகன். சாட்சி பாண்டியன் எனது ஊரை சேர்ந்தவர். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். 15.08.2022 ம் தேதி மாலை 7 மணிக்கு செஞ்சி ரோட்டிலிருக்கும் லட்சுமிகிருஷ்ணா எடைமேடையில் பூசணி எடுத்துவந்து எடைபோட்டு நல்லாவூர் வியாபாரிகள், சண்முகம், சுப்ரமணி ஆகியோர்களுக்கு கொடுத்துவிட்டு பணம் ரூ.70,000/- வாங்கிக்கொண்டு எனக்கு சொந்தமான டிவிஎஸ் 50 வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். நான் கொள்ளாறுக்கு இரவு 8.45 மணிக்கு போகும்போது டேவிட் மற்றும் பிரபு ஆகியோர்கள் என்னை மடக்கி கத்தியை காண்பித்து என்னை மிரட்டி என்னிடமிருந்த ரூ.70,000/- ஐ பிடிங்கிகொண்டார்கள். நான் சத்தம்போட்டபிறகு அங்கிருந்த பொதுமக்கள் வந்து என்னை காப்பாற்றினார்கள். எதிரி பிரபாகரன் பைப்பால் எனது வலது கால் முட்டியில் அடித்துவிட்டார், அதில் எனக்கு காலில் அடிப்பட்டது. பொதுமக்கள் வந்து என்னை வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள். நான் வீட்டிற்கு வந்து மணிகண்டனை அழைத்துக்கொண்டு திண்டிவனம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன்பின்னர் மகன் மணிகண்டன் புகார் எழுதி அதை நான் ரோசனை காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **வாதியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. புகாரை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனது மகன். புகாரிலுள்ள உள்ள வாசகங்கள் அனைத்தும் எனது மகன் தான் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் சாட்சிகள் பெயரை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. புகாரில் சண்டை நடந்தயிடத்தை தெளிவாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ரூ.70,000/- ம் பணத்தை எங்கிருந்து எடுத்துவந்தேன் என்றால் லட்சுமிளடைமேடை. அந்த 70000/- பணம் எந்த வகையான நோட்டுகள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை அடித்தயிடத்திற்கும் ரோசனை காவல் நிலையத்திற்கும் எத்தனை கி.மீ. இருக்கும் என்றால் 8 கி.மீ. 8 கி.மீ. தொலைவுள்ள காவல் நிலையத்திற்கு 2 1/2 மணி நேரத்திற்கு பிறகு தான் புகார் கொடுத்தேனா என்றால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு எடுத்துக்கொண்டு புகார் கொடுத்தேன். என்னை பைப்பால் அடித்ததாக நீதிமன்றத்தில் முதன்முறையாக சொல்கிறேன், புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் சிகிச்சை எடுக்கும்போது அப்போது பைப்பால் அடித்ததாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் பைப்பால் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் 1 மாதம் இருக்கும். புகார் கொடுத்ததற்கு ரசீது எதாவது வழங்கினார்களா என்றால் இல்லை. ஏழுமலை, மணிகண்டன், பாண்டியன், திருநாவுக்கரசு ஆகியோர்கள் சண்டை நடந்தபோது அங்கிருந்தார்களா என்றால் இருந்தார்கள். மேற்படி நபர்கள் அங்கில்லை, வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 70,000/- பணம் எடுத்து வந்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை மீண்டும் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். சம்மன் எதாவது கொடுத்து விசாரித்தார்களா என்றால் இல்லை. இரண்டாவது முறையாக வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் என்னை கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. சண்டை நடந்தயிடத்தை

சுற்றி வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்தயிடத்தில் 10 வீடுகள் இருக்குமா என்றால் ஊரே இருந்தது. என்னை முதன்முதலில் போலிசார் விசாரித்தபோது வீடுகளை அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை, வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.